# <u>புரிந்துணர்வு உடன்படிக்கை</u>

முதலாம் பகுதியினர்:-தங்கராசா கைம்பெண் மகேஸ்வரி

இரண்டாம் பகுதியினர்:-இராசதுரை புஸ்பராசா

தங்கராசா கைம்பெண் மகேஸ்வரி(கட்டிமணி)ஆகிய நான் ஒரு பகுதியாகவும் இராசதுரை மகன் புஸ்பராசா(ஆனந்தி)ஆகியவர் இரண்டாவது பகுதியாகவும் கீழ்வரும் விடயங்களை ஒருமித்து ஒத்துக்கொண்டு கையொப்பமிடுகின்றோம்.

இவ் இரு பகுதியினராகிய நாங்கள் ஆதிகோவிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாவர்.

**<u>இவ் உடன்படிக்கைக்கான பின்னணி</u>**

ஆதிகோவிலடியில் பரம்பரை பரம்பரையாக வசித்து வந்த மூத்த பிரஜையான வல்லிபுரம் முருகுப்பிள்ளை என்பவருக்கு 4 ஆண் வாரிசுகள் இருந்தனர்.

- முருகுப்பிள்ளை பொன்னுச்சாமி(பொன்னப்பா)
- முருகுப்பிள்ளை முத்து
- முருகுப்பிள்ளை இராமலிங்கம்
- முருகுப்பிள்ளை செல்லையா(ஆறப்பா)

ஆதிகோவிலடியின் மூத்த பிரஜையான வல்லிபுரம் முருகுப்பிள்ளை அவர்களால் நடாத்தப்பட்ட மரபு ரீதியான வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவில் “**சூரன்போர் திருவிழா**” அவர் இறந்த பின்பு மேற்குறித்த ஆண்வாரிசுகளால் நடாத்தப்பட்டு வந்தது.

- ❖ மேற்குறித்த பொன்னுச்சாமி(பொன்னப்பா),இராமலிங்கம்,செல்லையா ஆகியோரின் வாரிசுகள் இத்திருவிழாவை ஏறக்குறைய 35 ஆண்டுகளாக நடாத்த முன்வரவுமில்லை, தமது பங்களிப்பை செய்யவும் இல்லை.எனவே குறித்த மூவருக்குமுரிய திருவிழாவிற்கான பங்களிப்பினை தங்கராசா கைம்பெண் மகேஸ்வரி என்பவரே செய்து வருகின்றார்.
- ❖ குறித்த வல்லிபுரம் முருகுப்பிள்ளையின் மகன் முத்து என்பவருடைய நாலாவது பங்கு முத்துவின் மகனாகிய இராசதுரை என்பவரின் பெயரில் இருந்து வருகின்றது.அதனை இராசதுரையின் மகனாகிய புஸ்பராசாவும் இராசதுரையின் சகோதரானான செல்லத்துரையின் வாரிசுகளும் நடாத்தி வருகின்றனர்.அதாவது திருவிழாவில் உள்ள மூன்று பங்குகளைத் தவிர மீதியாகவுள்ள நாலாவது பங்குகிற்கே இவர்கள் அம்மன் கோவில் நிர்வாகத்திடம் தமது பங்களிப்பை செலுத்தி வருகின்றனர்.
- ❖ இந்நிலையில் குறித்த வாரிசுகளான தங்கராசா கைம்பெண் மகேஸ்வரியும் இராசதுரையின் மகன் புஸ்பராசா ஆகியோர் மூப்பு எய்தியுள்ளதாலும் எதிர்காலத்தில் இவற்றைப் பொறுப்பெடுக்கவுள்ள வாரிசுகளுக்கு பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்கவும் இவ் உடன்படிக்கை மூலம் பின்வரும் நிபந்தனைகளுடன் இதில் ஒப்பமிடுகன்றோம்.

<u>நிபந்தனை</u>

**மேற்குறித்த 3 பங்குகளை** நீண்ட காலமாக நடாத்தி வரும் தங்கராசா கைம்பெண் மகேஸ்வரி என்பவர் தனது கணவரும் மூத்த பிரஜையான வல்லிபுரம் முருகுப்பிள்ளையின் வழித்தோன்றலின் ஆண்வாரிசும் ஆகிய **காலம் சென்ற தனது கணவரான கந்தசாமி**

**மகன் தங்கராசா பெயருக்கு மாற்றி பதிவுகளை மேற்கொள்ள** உபயகாரராகிய நான்காவது பங்கிற்குரிய வம்சாவழியில் இருக்கின்றவரும் அத்திருவிழாவிற்கான பங்களிப்பை செய்துவருபவருமான இராசதுரை புஸ்பராசாவும் அவரது சிறிய தந்தையான செல்லத்துரையின் வாரிகளும் தொடர்ந்து செய்வதற்கு **உரிய பதிவுகளை மேற்கொள்ள வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோயில் நிர்வாகத்திற்கு இப்பத்திரத்தின் மூலம் மனமொத்து அறியத்தருகின்றோம்**.அத்துடன் உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நிர்வாகத்தினரை அன்புடன் வேண்டுகின்றோம்.இதற்கு இணங்க கீழே எமது ஒப்பங்களை இடுகின்றோம்.

……………………. ……………………….

இராசதுரை புஸ்பராசா திருமதி தங்கராசா மகேஸ்வரி

(ஆனந்தி) (கட்டிமணி)

சாட்சிகள்

நடராசா சிவரட்ணம்(Banker ஜெயம்) ……………………..

ஆதிகோவிலடி ஒப்பம்

(தற்சமயம் முருகையன் கோவிலடி வல்வெட்டித்துறை)

இந்த மனமொத்த புரிந்துணர்வு உடன்படிக்கை என்னால் சகலருக்கும் வாசித்து விளக்கப்படுத்தப்பட்டுள்ளது.என்பதனை இத்தால் சான்று பகர்கின்றேன்.

………………………….

சமாதான நீதவான்